செ.வெ. எண்: 426 நாள்: 20–07–2012

# செய்தி வெளியீடு

மீனவர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துதல், மீன் வளத்தைப் பெருக்குதல், சர்வதேச தரத்திற்கேற்ப சுகாதாரமான முறையில் மீன்கள் விற்பனை செய்தல் மூலமாக அந்நியச் செலாவணியை அதிகரித்தல், மீனவர்களுக்கு நேரிடையாக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்கித் தருதல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மீன்வளத்தை பெருக்குவதற்குத் தேவையான கல்வி அறிவை அளிக்கும் வகையில் நாகப்பட்டினத்தில் மீன்வளப் பல்கலைக்கழகம் ஒன்றினை அமைத்திட சென்ற ஆண்டு உத்திரவிட்டார்கள்.

இதன் தொடர்ச்சியாக, மீன் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் மாவட்டமான திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் 34 கோடியே 8 லட்சம் ரூபாய் செலவில் மீன்வளத் தொழில்நுட்ப நிலையம் அமைப்பதற்கான நிர்வாக ஒப்புதலை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கியுள்ளார்கள். மேலும் இதன் முதற்கட்ட பணிகளுக்காக 7 கோடி ரூபாய் நிதி விடுவிக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இந்த மீன்வளத் தொழில்நுட்ப நிலையத்தினை ஏற்படுத்துவதற்காக பொன்னேரியில் 20.78 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொழில் நுட்ப நிலையத்தில் முதற்கட்டமாக மாணவ, மாணவியருக்கு இறால் வளர்ப்பு, அலங்கார மீன்வளர்ப்பு, மீன் இனப்பெருக்க தொழில் நுட்பம் மற்றும் மீன்வளர்ப்பு சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப்படும். இங்கு பயிலும் மாணவ, மாணவியருக்கு மீன்பிடி படகு மற்றும் இயந்திர பராமரிப்பு, கடலாள் பயிற்சி மற்றும் நீர்வழிப் பயிற்சி ஆகிய பாடப்பிரிவுகளில் பட்டயங்கள் வழங்கப்படும். இதன்மூலம், இதில் பயிலும் மாணவ, மாணவியருக்கு, உள் நாடு மற்றும் வெளிநாடுகளில் நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் மீன்வளத் தொழிலில் புதிய நவீன தொழில் நுட்பம் புகுத்தப்பட்டு, மீன் பெருக்கம் அதிக அளவில் ஏற்பட வழிவகுக்கும்.

********

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள்தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :- 20.7.2012.